யாழ். செயலகம் முன் இன்று மறியல் போராட்டம்

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 33 திருவள்ளுவர் ஆண்டு 2023 தை 22 இதழ் 357
யாழ்ப்பாணம் புதன்கிழமை 05—02 1992

வெகுஜன அமைப்புகள் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

இராணுவ நடவடிக்கை, பொருளாதார நெருக்கடி மற்றும் இராணுவ ஆக்கிரமிப்புகளைக் கண்டித்து, இன்று யாழ். செயலகம் முன்பாக மாபெரும் மறியல் போராட்டம் நடைபெறுகிறது. தமிழீழ வெகுஜன அமைப்

[4ம் பக்கம் பார்க்க]

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் பகிஷ்கரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலகம் முன்னால் இன்று நடைபெறும் மறியல் போராட்டத்தினையொட்டி சகல வகுப்புகளையும் பகிஷ்கரித்து மேற்படி போராட்டத்தில் பல்கலைக்கழக மாண

(4-ம் பக்கம் பார்க்க)

உதவிவழங்குங் கூட்டத்திற்கு இலங்கை குழு செல்லும்

(கொழும்பு)

நாளைமறுதினம் பாரிஸில் நடைபெறும் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் கலந்துகொள்ளுமுகமாக பிரதமர் டி. பி. விஜேதுங்கா தலைமையிலான உயர்மட்டக்குழு இன்று பாரிஸ் புறப்படுகிறது.

நிதி, கொள்கைதிட்டமிடல் அமுலாக்கல் அமைச்சின் செயலாளர் பாஸ்கரலிங்கம், ஜனாதிபதியின் சர்வதேச விவகாரங்களுக்கான ஆலோசகர் பிரட்

(4-ம் பக்கம் பார்க்க)

3 தமிழர் கைது

(திருமலை)

திருமலையில் நேற்று முன்தினம் 3 தமிழர்கள் அரச படையினரால் கைது செய்யப்பட்டனர்.

மூதூர் கட்டைபறிச்சானையைச் சேர்ந்த கு. கிருஷ்ணதாஸ், க. தவராசா, க. குணநாதன் ஆகியோரே கைது செய்யப்பட்டவர்களாவர்.

★ஆனையிறவு கடல்நீரேரியில் விசைப்படகு மூழ்கடிப்பு

நான்கு படையினர் பலி!

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவு கடல்நீரேரியில் கடற்புலிகள் நடத்திய தாக்குதலில் கடற்படையினரின் விசைப்படகு ஒன்று மூழ்கடிக்கப்பட்டதுடன் அதில் வந்த நான்கு படையினர் கொல்லப்பட்டனர்.

நேற்றுமுன்தினம் காலை பூநகரி கடலிலிருந்து ஆனையிறவு கடல் நீரேரி நோக்கிச் சென்றுகொண்டிருந்த விசைப் படகு ஒன்றே கடற்புலிகளின் தாக்குதலுக்கு உள்ளானது. 41 அடி நீளமான இந்த விசைப்படகில் ஆனையிறவு முகாமிற்கு உணவு எடுத்துச் செல்லப்பட்டதாகத் தெரிய வருகிறது.

(4-ம் பக்கம் பார்க்க)

மட்டு. மாவட்டத்தில் 4 தமிழர் சுட்டுக்கொலை!

(மட்டுநகர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் 4 தமிழர்கள் இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

நேற்று முன்தினம் இம் மாவட்டத்திலுள்ள அம்பலாந்துறை என்னும் இடத்தில் 4 தமிழர்கள் இராணுவத்தின

(4-ம் பக்கம் பார்க்க)

உள்நாட்டுப் போருக்கு விரைவில் முற்றுப்புள்ளி

- ஜனாதிபதி பிரேமதாச -

(கொழும்பு)

"நாட்டில் நடந்துகொண்டிருக்கும் உள்நாட்டுப் போருக்கு விரைவில் முற்றுப் புள்ளி வைக்கவேண்டும்"

ஜனாதிபதி பிரேமதாசா நேற்று கொழும்பில் நடைபெற்ற 44வது சுதந்திரதினக் கொண்டாட்டத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவர் மேலும் இங்கு உரையாற்றுகையில்; நாட்டின் ஒருமைப்பாட்டைக் காப்பாற்றுவதற்காக ஒன்றுமறியா அப்பாவி மக்கள் இரத்தம் சிந்து

(4ம் பக்கம் பார்க்க)

நேற்று தீவிரமான பாதுகாப்பு ஏற்பாடு

(கொழும்பு)

சுதந்திர தினத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும்பொருட்டு, புலிகளின் தாக்குதல் தீவிரப்படுத்தப்படலாம் என்ற அச்சத்தினால் நேற்று கொழும்பு நகர் உட்பட அனைத்துப் பகுதிகளிலும். பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்ததாக அரசு தரப்புச்செய்திகள் தெரிவித்தன.

நேற்று முழுவதும் படையினர் பலத்த கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். குடாப் பகுதியில் பரவலான தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாவில் நேற்றும் நேற்று முன்தினம் இரவும் பரவலான தாக்குதலை ஸ்ரீ லங்காப் படையினர் நடாத்தியுள்ளனர்.

பலாலி இராணுவ முகாமிலிருந்து நேற்று முன்தினம் இரவு மக்கள் குடியிருப்புகளை நோக்கி தொடர்ச்சியான ஷெல் தாக்குதல் நடாத்தப்பட்டதோடு வட்டுவன், வளலாய் காவலரணிலிருந்தும் படையினரால் சரமாரியான துப்பாக்கிப் பிரயோகம் நடாத்தப்பட்டது.

இதேவேளையில் கல்முனையிலிருந்து படையினர் ஷெல் தாக்குதலையும் மேற்கொண்டனர்.

(4-ம் பக்கம் பார்க்க)

ஊர்வலங்கள் நடத்த தி. மு. க. விற்கு தடை

(சென்னை)

"தமிழகத்தில் தி. மு. கழகத்தினர் நடாத்தும் ஊர்வலங்கள் மற்றும் பேரணிகளுக்கு ஜெயலலிதா தலைமையிலான அ. தி. மு. க. அரசு தடை விதித்துள்ளது.

இது தொடர்பாக தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா குறிப்பிடுகையில்;

(4-ம் பக்கம் பார்க்க)

வல்வெட்டித்துறையிலிருந்து 5 மைல் தூரத்தில் நின்ற இந்திய மீன்பிடி படகுகள்

(வடமராட்சி)

நாற்பதிற்கு அதிகமான இந்திய மீன்பிடிப் படகுகள் நேற்று திசைமாறி வல்வெட்டித்துறைக் கடற்பரப்பில் தென்பட்டன.

வல்வெட்டித்துறை கடற்கரையிலிருந்து ஐந்து மைல் தூரத்தில் இப்படகுகள் நின்றன.

சிலமணிநேரத்தில் இப்படகுகள் இந்திய கரையை நோக்கிச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. (51)

படையினர் தாக்குதலினால் முல்லை. மீனவர் பாதிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கடலில் கடற்படையின் நடமாட்டம் அதிகரித்துள்ளதை அடுத்து அப்பகுதியிலுள்ள மீனவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இக்கடற்பகுதியில் மீன்

(4-ம் பக்கம் பார்க்க)

ராஜீவ் கொலை குறித்து இலங்கையும் இந்தியாவும் விரைவில் தொடர்பு!

(புதுடில்லி)

ராஜீவ் கொலையில் விடுதலைப் புலிகள் தலைவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளதால் இலங்கையுடன் இந்தியா விரைவில் தொடர்பு கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கொலை விசாரணையின் முன்னேற்றம் குறித்தே இந்தியா இலங்கையுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாம். (சி)

சமாதான பேச்சுக்கான சாத்தியங்கள் குறைவு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு பிரச்சினை தீர்வுக்கு பேச்சுவார்த்தைக்கான சாத்தியக் கூறுகள் பெருமளவு குறைந்துள்ளதால் யாழ், குடாநாட்டில் பெரும் இராணுவ தாக்குதல் ஒன்று மேற்கொள்ளப்படக்கூடிய

(4-ம் பக்கம் பார்க்க)

வரி விளம்பரம்

வாடகைக்கு

நகரின் மத்தியில் காங்கேசன்துறை வீதியிலும், கன்னாதிட்டி வீதியிலும் கடைகள் வாடகைக்கு உண்டு. மேலதிக விபரங்களுக்கு ஆலய பரிபாலன சபை வண்ணை சிவன் கோவிலுடன் உடன் தொடர்புகொள்ளவும். (எ-1917)

புத்தகம் கட்டுதல்

உங்கள் பெறுமதிமிக்க புத்தகங்கள், ஆய்வுக் கட்டுரைகள், நாளேடுகளின் [illegible], பாடசாலை மாணவமணிகளின் புத்தகங்கள், கொப்பிகள் மற்றும் சகல விதமான புத்தகங்களும் மிக அழகான முறையில் உரிய நேரத்தில் கட்டிக் கொடுக்கப்படும். பூபாலசிங்கம் புத்தகசாலை, 255 மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். (எ-1910)

மணமகன் தேவை

37 வயதுடைய 7ல் செவ்வாய் (புள்ளி 8) உள்ள பெண்ணுக்கு பெற்றோர் வரன் தேடுகின்றனர். கொக்குவில் பகுதியில் வீடு கொடுக்கப்படும். மற்றும் சீதனமும் வழங்கப்படும். தாரமிழந்தவர்களும் விண்ணப்பிக்கலாம். விபரம் இல. சி-5916, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். (சி-5916)

தாதிகள் தேவை

யாழ் நகரில் உள்ள தனியார் வைத்திய நிலையத்திற்கு பயில விரும்பும் பெண் தாதிகள் உடன் தேவை. சான்றிதழ்களுடன் 8-02-92 பி. ப. 4.00 மணிக்கு மெடிசினு அன்று லேற்றிஸ 12 1/2, காவிப் பசய் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு நேரில் வரவும். (சி 5941)

பதில் உதவி ஆணையாளர்

(மாங்குளம்)

முல்லைத்தீவு செயலக திணைக்கள காரியாலய உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ் சுந்தரம் முல்லைத்தீவு கமநல சேவை அலுவலகத்தின் பதில் உதவி ஆணையாளராகவும் பணிபுரிந்துவருகிறார். (150)

முன்னாள் ஜனாதிபதிக்கு 3 வருட சிறை

(டாக்கா)

பங்களாதேஷ் முன்னாள் ஜனாதிபதியும் தற்போது 10 வருட தண்டனை பெற்று சிறையிலுள்ளவருமான ஜனாப் எர்ஷாத்திற்கு 10 லட்சம் ரூபா அரசபணத்தை கையாடிய குற்றச்சாட்டையடுத்து மேலும் 3 வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

பொது அறிவித்தல்

யாழ்ப்பாண மாநகரசபை

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் இயங்கும் சகல வியாபார நிறுவனங்களும் 1992ஆம் ஆண்டுக்கான வியாபார உத்தரவுப் பத்திரத்தினை 29-02-92ஆம் திகதிக்கு முன்னர் உரிய கட்டணங்களைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

உரிமம் பெறத்தவறும் வியாபார நிலையங்கள் மாநகரசபைகள் கட்டளைச் சட்டம் அத்தியாயம் 252, பிரிவுகள் 247, 267 இன் பிரகாரம் தடைசெய்யப்படுவதுடன் மேலதிக தண்ட விதிப்பனவுக்கும் உள்ளாக நேரிடும் என்பதைக் கவனத்திற் கொண்டு வியாபார நிறுவனங்களின் உரிமையாளர்கள் 1992ஆம் ஆண்டுக்கான வியாபார உத்தரவுப் பத்திரத்தினைப் பெற்று ஒத்துழைக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

வே. பொ. பாலசிங்கம்
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
28-01-1992. (ஏ 1918)

ஓராண்டு நினைவஞ்சலி

நெல்லிநாதர் சிவப்பிரகாசம்

தோற்றம்: 1908-10-24 மறைவு: 1991-02-16
திதி: 05-02-1992

பிரியமுள்ள ஐயாவே
நீங்கள் எங்களைவிட்டுப் பிரிந்து ஓராண்டானது
ஓராண்டென்ன ஓராயிரம் ஆண்டுகள்
உலகில் மறையினும்
உங்களை மறத்தல் இயலுமா எமக்கு
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பெறாமக்கள்.

இல. 2, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம். (சி 5939)

"சமயோசிதமும் ராஜதந்திரமுமே யுத்தத்தை தீர்த்துவைக்கும்"

(யாழ்ப்பாணம்)

மூக்குப்போனாலும் எதிரிக்கு சகுனப் பிழையாக நடக்க வேண்டும் என்று அரசியல் வாதிகளும், பெரும்பான்மை சக்திகளும் நினைத்துச் செயற்பட்டால் இந்த நாடு குட்டிச் சுவராவதை யாருமே தடுக்க முடியாது.

இவ்வாறு கொழும்பில் இருந்து வெளிவரும் பத்திரிகை ஒன்று ஆசிரிய தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

மேலும் அப்பத்திரிகை குறிப்பிட்டிருப்பதாவது:

யுத்தம் என்றும் யுத்தம் என்று வரிந்து கட்டிக்கொண்டு நிற்பதற்கு இது ஒன்றும் அயல் வீட்டுக்காரன் சச்சரவல்ல. வடக்கு கிழக்கு யுத்தமானது நீண்டகால அரசியல் முரண்பாடுகளை அடிப்படையாகக் கொண்டதாகும்.

சமயோசிதமும், ராஜதந்திரமுமே இந்த யுத்தத்தைத் தீர்த்து வைப்பதற்கு வழி கோலும் என்பது நிதர்சனமாகும்.

இந்த நிலைமை சிறியதொரு நாடான இலங்கை தீவை எங்கு கொண்டுபோய் தள்ளி விடும் என்பதை நாம் இன்றும் உணரமுடியாமல் இருப்பது பேதமையிலும், பேதமை. நீண்டகால யுத்தத்தினால் சீரழிந்து குட்டிச்சுவராகிப் போன நாடுகள் இன்று உலகிற்கே படிப்பினையாக உள்ளது.

ஒருபெரிய வல்லரசு நாடு தனது தேசிய வருமானத்தில் பாதுகாப்புக்கு செலவிடுவதை காட்டிலும் கூடிய விகிதமான பணத்தை எமது நாடு யுத்தத்திற்கு செலவிடுகிறது. (152)

நிவாரண அட்டை விண்ணப்பம்

(மானிப்பாய்)

வேலணை, நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் இருந்து இடம்பெயர்ந்த அரச ஊழியர்கள் இம்மாதம் 9ம் திகதி ஞாயிற்றுக்கிழமைக்கு முன் நிவாரண அட்டை பெறுவதற்கு விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (71)

நெடுந்தீவு பிரதேச செயலர் பணிமனை

(மானிப்பாய்)

நெடுந்தீவு பிரதேச செயலர் பணிமனை தற்பொழுது யாழ். செயலகத்தில் இயங்கிவரும் வேலணை பிரதேச செயலர் பணிமனையுடன் இணைந்து செயற்படுகிறது. (71)

சைக்கிள் திருட்டு

(பளை)

வடமராட்சி கிழக்கிலுள்ள மாமுனை என்னும் இடத்தில் வீட்டிலிருந்த சைக்கிள் திருட்டுப்போயுள்ளது. இச் சைக்கிளின் சொந்தக்காரர் இரு சேனையிலிருந்து இடம் பெயர்ந்துவந்தவரென்பது குறிப்பிடத்தக்கது.

மருதங்கேணி சந்தையில் மரக்கறி வாங்கச்சென்றவரின் சைக்கிளும் திருடப்பட்டுள்ளது.

வீசப்படும் வெங்காயப் பூக்கள்

(வடமராட்சி)

வெங்காயப் பூக்கள் தற்போது வீதியோரங்களிலும் வெளிகளிலும் வீசப்படுகின்றன.

கடந்த வருடத்தைப்போன்று இவ்வருடமும் வெங்காயப் பூக்கள் விலைகொடுக்கப்படாது ஏற்றுமதியின்மையால் வீசப்படுகின்றன. (51)

சாரணர் பயிற்சிநெறி

(யாழ்ப்பாணம்)

சாரணர் தலைவர்களுக்கான பயிற்சிநெறி எதிர்வரும் 6ம் திகதி முதல் 8ம் திகதிவரை கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

மேற்படி பயிற்சிநெறியினை திருமதி ஆர். ஜே. பி சேவியர். திரு. நா. நல்லையா ஆகியோர் நடத்துவார்கள் என்று உதவி மாவட்ட ஆணையாளர் திரு. ஈ. இராஜகுமார் தெரிவித்தார். (வி)

ஐக்கிய நாணயசங்கங்கள்

மாணவர் கல்விக்கு உதவி வேண்டும்

(கொழும்புத்துறை)

இன்றையபோர்க்கால இராணுவ நடவடிக்கைகளின் மத்தியில் பின்தங்கிய, வறிய குடும்ப மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் ஐக்கிய நாணய சங்கங்கள், சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்கள் உதவமுன்வரவேண்டும்.'

யாழ் மணியம்தோட்டத்தில் நடந்த நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவு சமாச ஒன்றிணைந்த கூட்டுறவுக் கல்வி அபிவிருத்தித்திட்ட தலைமைத்துவப் பயிற்சிக் கருத்தரங்கிற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் பிராந்திய சபைத் தலைவர் திரு. செ. கந்தசாமி இவ்வாறு கூறினார்.

தற்போதைய சூழ்நிலையில் பாடசாலை மாணவர்களுக்கு சீருடைகள், உபகரணங்களையும் இச் சங்கங்கள் வழங்கி வறிய மாணவர்களின் கல்வியை முன்னேற்றமுடியுமென்றும் அவர் குறிப்பிட்டார்.

"நாம் கற்கும் கல்வி இனத்திற்கு பயன்தரவேண்டும்"

(யாழ்ப்பாணம்)

நாம் கற்கும் கல்வி எமது இனத்துக்கும், சமுதாயத்துக்கும் பயன்படக் கூடியதாக இருக்கவேண்டும். கல்லூரிப் படிப்பை முடித்துக்கொண்டு பல்கலைக்கழகத்துக்கோ அல்லது தொழில் வாய்ப்பையோ நாடிச்செல்ல இருக்கும் நீங்கள் சமூகத்தின் நெறி தவறாது நடக்கவேண்டும் அப்போதுதான் நீங்கள் கற்ற கல்லூரிக்கும் இந்த தமிழ் மண்ணுக்கும் பெருமைதேடித் தந்தவர்களாக பிறரால் மதிக்கப்பட்டு போற்றப்படுவீர்கள்.

இவ்வாறு யாழ் பல்கலைக்கழக கிறிஸ்தவ-இந்து நாகரிகத்துறைத் தலைவர் கலாநிதி வண. சந்திரகாந்தன் கூறினார்.

யாழ்ப்பாணம் சென் பற்றிக்ஸ் கல்லூரியில் நேற்று முன்தினம் நடைபெற்ற க. பொ. த. உயர்தர வர்த்தக மாணவர் நடாத்திய ஒன்றுகூடல் நிகழ்ச்சிக்கு பிரதம அதிதிகளாக, கலாநிதி வண சந்திரகாந்தனும், சென். ஜோன்ஸ் கல்லூரி அதிபர் திரு. எஸ். தனபாலன் தம்பதிகளும் கலந்துகொண்டார்கள்.

சென். பற்றிக்ஸ் கல்லூரி உயர்தர வகுப்பு மாணவர் மனோகரன் வரவேற்புரை நிகழ்த்தினார். இக் கல்லூரியின் அதிபர் வண ஜோசப் பிரான்சிஸ் அனைவருக்கும் நன்றி தெரிவித்தார். (வி)

சுகாதார திணைக்களம்

முக்கிய அறிவித்தல்

ஊர்காவற்துறை மாவட்ட வைத்தியசாலை காரைநகர் சுற்றுமடல் கூறு ஆகிய வைத்தியசாலைகளில் கடமையாற்றி தற்காலிகமாக வேறு வைத்தியசாலைகளில் கடமைபுரியும் சகல உத்தியோகத்தர்/ஊழியர்கள் யாவரும் உடனடியாக தங்களின் நிரந்தர வைத்தியசாலைகளுக்கு சென்று கடமைபுரியுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

அவ்விடங்களுக்கு செல்லும் ஒழுங்குகள் பற்றி பிராந்திய சுகாதார பணிப்பாளருடன் உடனடியாக தொடர்பு கொள்ளவும்.

Dr. ந. கனகசபை,
பிராந்திய சுகாதார சேவைகள்
பணிப்பாளர், யாழ்ப்பாணம்.

03-02-92. (ஏ 1919)

மாங்குளத்தில் வைத்தியசாலை

(மாங்குளம்)

மாங்குளத்தில் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கையை அடுத்து ஒலுமடுவுக்கு இடம் மாற்றப்பட்ட கிராமிய வைத்தியசாலை மீண்டும் மாங்குளம் ஐந்து வீட்டுத் திட்டத்தில் இயங்க ஆரம்பித்துள்ளது. (150)

கும்பாபிஷேகம்

(உடுவில்)

உடுவில் குமரகோட்டம் அருள்மிகு முருகமூர்த்தி தேவஸ்தான சம்புரோக்ஷண மகாகும்பாபிஷேகம் பெப்ரவரி மாதம் 9-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8-43 முதல் 10-14 மணிக்குள் நடைபெறவுள்ளது. (1[illegible]9)

மருந்துத்தட்டுப்பாடு

(புலோலி)

வடமராட்சி கிழக்கில் புதிய காய்ச்சல் ஒன்று வேகமாகப் பரவிவருகிறது.

இதேநேரம் இப்பகுதியில் உள்ள மருதங்கேணி அம்பன் அரசினர் வைத்தியசாலைகளில் மலேரியாக் காய்ச்சலுக்கான தடுப்பு மருந்துகள் இல்லையென்று கூறப்படுகிறது. (61)

கொடிவார ஆரம்ப விழா

(பருத்தித்துறை)

பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலை அபிவிருத்தி நடவடிக்கைகளை கருதி வைத்தியசாலை அபிவிருத்திச்சபையால் நடாத்தப்படும் கொடிவார ஆரம்ப விழா இம்மாதம் 9ம் திகதி நடைபெறவுள்ளது. (52)

'தடா' சட்டத்தை எதிர்த்து சென்னையில் நடந்த
தி. மு. க. பேரணி மீது பொலிஸார் தாக்குதல்
துப்பாக்கிச்சூட்டில் 20 பேர் படுகாயம்

(சென்னை)

தமிழகத்தில் தடா சட்டம் முறைகேடாக பயன்படுத்தப்படுவதை கண்டித்து நேற்று முன்தினம் மாலை தி. மு. க. நடாத்திய ஆர்ப்பாட்டப் பேரணியில் பொலிசார் மேற்கொண்ட தடியடி பிரயோகத்திலும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்திலும் 20 பேர் படுகாயமடைந்தனர்.

ஆயிரக்கணக்கான தி.மு.க. வினர் கலந்துகொண்ட இவ் ஊர்வலம் ஆர்ப்பாட்டப்பேரணியாக சென்றுகொண்டிருந்த போது ஓட்டத்தில் பொலிஸாருக்கும் தி மு க. ஆதரவாளர்களுக்குமிடையில் ஏற்பட்ட சச்சரவு வன்முறையில் முடிவடைந்தது.

பொலிசார் சச்சரவை ஏற்படுத்தியபின் ஊர்வலம் மீது பலத்த தடியடிப் பிரயோகத்தை மேற்கொண்டனர். இதையடுத்து ஊர்வலத்தில் பெரும் அமளி ஏற்பட்டது. தொண்டர்களும் பொலிசாரை தாக்க முற்பட்டனராம்.

இதையடுத்து பொலிசார் மிகக்கடுமையாக தடியடிப் பிரயோகத்தை மேற்கொண்டதுடன், துப்பாக்கி சூட்டையும், கண்ணீர்புகை பிரயோகத்தையும் மேற்கொண்டனர். இதன்போது ஏற்பட்ட வன்முறையில் 10 பொலிசார் படுகாயமடைந்தனர்.

தி. மு. க. தலைவர்கள் தலையிட்டு பிரச்சினையை ஒருவாறு சமாளித்து ஊர்வலத்தை நடாத்தி முடித்ததுடன், ஆளுநரிடம் மகஜரை சமர்ப்பித்து பொலிசாரின் நடவடிக்கை குறித்தும் தமது கண்டனத்தை தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் தற்செயலாக நடந்தது அல்ல என்றும் இது திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை என்றும் தி. மு. க. பிரமுகர் திரு. ஆவடி [illegible] பலத்த கண்டனம் தெரிவித்துள்ளார்.

மேற்படி 'தடா' சட்டத்தில் இதுவரை தி. மு. க. முக்கியஸ்தர்கள் பலர் உட்பட 80க்கும் மேற்பட்ட தி மு க. வினரும் விடுதலைப் புலிகள் பலரும் பொதுமக்கள் பலரும் கைதுசெய்யப்பட்டு தமிழகத்தில் பல பகுதிகளிலும் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (சி)

05/2/1992
புதன்கிழமை
தமிழுக்கு தை 22

துதியை தி. இ. 4-28வரை, அவிட்டம் மு. ப. 8 31வரை மரணயோகம், இராகுகாலம் பகல் 12-35 முதல் 2-05வரை, சுபநேரம் மாலை 5-05 முதல் 6-35 வரை, அப்பூதியடிகள் குருபூஜை.

மேடம்: விரைவு விருத்தி, மனமகிழ்ச்சி, நண்பருதவி.

இடபம்: உயர்ந்த நிலை, தொழில் விருத்தி பிரயாச மிகுதி.

மிதுனம்: பந்துவிரோதம், காரிய மாற்றம், வீண்பழி.

கடகம்: தடுமாற்றம் நடைக் கஷ்டம், குழப்பம்.

சிங்கம்: வரத்து வசீகரம், பிரயாசம், குடும்பநன்மை.

கன்னி: காரியானுகூலம், தொழில் சித்தி, [illegible].

துலாம்: மன மகிழ்ச்சி, இல்லச் சிறப்பு, பணவரவு

விருச்சிகம்: மானக்குறைவு சரீர பீடை, மனப்பயம்

தனுசு: அதிக செலவு, புத்திரர் பிறப்பு, வாக்குவன்மை.

மகரம்: வெளிமனிதர் உறவால் கேடு, [illegible] கலக்கம், செலவு.

கும்பம்: தொழில் லாபம், இனசன உதவி, குடும்ப மகிழ்ச்சி.

மீனம்: இடமாற்றம், [illegible] தொல்லை, பணமுடை.

-ஜோஸ்யர்

15 மாவீரர் படங்களுக்கு
பெற்றோர் மாலை அணிவித்து அஞ்சலி

(பருத்தித்துறை)

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட 15 வீரவேங்கைகளின் ஞாபகார்த்தக் கூட்டம் பருத்தித்துறை தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி வடமராட்சி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. அரசண்ணா தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவீரர்களின் பெற்றோர்கள், உறவினர்கள் உட்பட பெருந்திரளான மக்கள் கூடியிருந்தனர். விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணி வடமராட்சிப் பொறுப்பாளர் தணிகைச்செல்வி இஞ்ஞாபகார்த்தக் கூட்டத்தைச் சுடரேற்றி ஆரம்பித்து வைத்தார்.

இங்கு வைக்கப்பட்டிருந்த மாவீரர்களின் உருவப்படங்களுக்கு மாவீரர்களின் பெற்றோர்கள் உறவினர்கள் மலர் மாலைகள் அணிவித்து மலர்கள் அஞ்சலி செலுத்தினர்.

இம்மாவீரர்களின் ஞாபகார்த்த உரையை விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி, மக்கள் உறவு கொள்கை முன்னெடுப்புப் பிரிவைச் சேர்ந்த திருவாளர்கள் வசந்தன், தனபால், செல்வநாயகம், வடமராட்சி மகளிர் முன்னணிப் பொறுப்பாளர் செல்வி தணிகைச்செல்வி, சிற்றூராட்சித் தலைவர் திரு. ஆ. சதாசிவம், திரு. என். ஸ்ரீயகுமார் ஆகியோர் நிகழ்த்தினர். வடமராட்சி கலை, பண்பாட்டுக் கழகத்தினரின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (54)

செய்திச் சரம்

(சென்னை)

காரைக்குடி தொகுதியின் சுதர்சனம் எம். எல். ஏ. யின் வீட்டுக்கும் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. நவம்பர் 21 ஆம் திகதியிலிருந்து ஒரு சப்-இன்ஸ்பெக்டர், ஒரு ஹெட் கான்ஸ்டபிள், ஆறு கான்ஸ்டபிள்கள் இவரது வீட்டுக் காவல் செய்து வருகின்றனர். இவர் எம். எல். ஏ யாகவருவதற்கு உதவிய இவரது [illegible] கணவன் சித்தர் கும்பலை யாரிற்கும் பயந்தே இவர் பொலிஸ் பாதுகாப்புக் கோரியிருந்தார். தானும் ஒரு எம். எல். ஏ. என்ற நினைத்துக்கொண்டு அத்தொகுதியில் பல விடயங்களில் தலையிட்டு வந்தார். இதனால் பயந்து எம். எல். ஏ. பாதுகாப்புக் கோரினார்.

அமைச்சர்களுக்கு தடை

தஞ்சாவூரில் நடந்த ஒரு திருமண வைபவத்திற்கு [illegible] தமிழக உள்ளாட்சித்துறை அமைச்சர் திருநாவுக்கரசு வாக்குக் கொடுத்திருந்தார். அமைச்சரை வரவேற்று தஞ்சை முழுவதும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன. முகூர்த்த நேரத்தின்போது திருமண வீட்டார் காத்திருக்க தாமதம். அமைச்சர் வரவில்லை. திருமணம் போன்ற நிகழ்ச்சிகளுக்கு அமைச்சர்கள் கலந்துகொள்ளக்கூடாது என முதலமைச்சர் ஜெயலலிதா திடீரென உத்தரவு போட்டுள்ளார் என்ற தகவல் கிடைத்தது. அமைச்சர் இன்றித் திருமணம் நடைபெற்றது.

விவசாயிகள் அதிர்ச்சி

தமிழக விவசாயிகளுக்கு தி. மு. க. ஆட்சிக் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட பம்செட்டுக்கு வழங்கப்பட்ட இலவச மின்சாரத் திட்டத்தை தமிழக அரசு ரத்துச் செய்யலாம் என்ற தகவல் விவசாயிகள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இது பற்றி தமிழக அரசு, மத்திய அரசுக்குச் சுற்றறிக்கை ஒன்றை அனுப்பியுள்ளதாகக் கூறப்படுகிறது. மின்சாரத் திட்டம் ரத்துச்செய்யப்படும் பட்சத்தில் அதனை எதிர்த்துப் போராட விவசாயிகள் முடிவு செய்துள்ளனர்.

தீக்கிரை

தமிழக அரச ஊழியர் ஒன்றிய மண்டல மாநாடு சேலத்தில் நடந்தபோது அரசின் சுற்றறிக்கையின் நகல் ஒன்றை தங்கவேல் சி. இளங்கோ தீயிட்டுக் கொளுத்திப் பரபரப்பை ஏற்படுத்தினார். அரச ஊழியரின் சம்பளத்தில் வெட்டுச் செய்யப்பட்டதை ஆட்சேபித்தே நகல் தீயிடப்பட்டதாகக் கூறப்பட்டது. இரண்டு வருடங்களாகத் தொழில் வரியை அரசே கட்டி வந்தது. தற்போது இந்த வரி ஊழியர் சம்பளத்தில் கழிக்கப்படுமென அரசு அறிவித்ததைத் தொடர்ந்து இந்நிலை ஏற்பட்டது.

95 இல் தமிழக முதல்வர்

திருச்சியில் நடிகர் பிரபுவின் பிறந்த தினம் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. இந்த விழாவை ஒட்டி பிரபு ரசிகர்கள் ஒரு சுவரொட்டி வெளியிட்டிருந்தார்கள். அச் சுவரொட்டியில் 1995 ஆம் ஆண்டு தமிழக முதல்வராக இளைய திலகம் (பிரபு) என்று எழுதப்பட்டிருந்தது. இந்தச் சுவரொட்டியை ரஜனிகாந்த் ரசிகர்கள் சில இடங்களில் [illegible] செய்துவிட்டதாக தகவல்.

இடம்பெயர்ந்த மக்களுக்கு 650 குடிமனைகள்

(வேலணை)

இலங்கை செஞ்சிலுவை சங்க யாழ். கிளையினர் வடமராட்சி கிழக்குப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கு 650 தற்காலிகவதிவிட குடிமனைகள் அமைத்துவருகின்றனர்.

[illegible] கட்டிமுடிக்கப்பட்ட [illegible] தற்காலிக வதிவிடக் குடி[illegible] குடியேறியுள்ளதுடன் பலருக்கு சமையல் பாத்திரங்கள் உட்பட வீட்டுப்பாவனைப் பொருட்கள் வழங்கப்படுகின்றன. (75)

முதலாமிடம்

(பருத்தித்துறை)

இலங்கை நெட்பால் நிறுவனம் ஐக்கியநாடுகள் சிறுவர் நிதியம் ஆகியனவற்றுடன் இணைந்து கல்வி, உயர்கல்வி அமைச்சு அகில இலங்கை ரீதியில் முன்னெடுத்து நடாத்திய கட்டுரைப்போட்டியில் தமிழ்மொழி பிரிவில் பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலய மாணவன் செல்வன் எஸ். ஸ்ரீதரன் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார். (52)

புதுக்குடியிருப்பில்
இலங்கை வங்கி இயங்க ஏற்பாடு

(மாங்குளம்)

முல்லைத்தீவு இலங்கைவங்கி மீட்கப்பட்ட ஆவணங்களுடன் புதுக்குடியிருப்பில் இயங்க வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

இராணுவ நடவடிக்கையால் செயலிழந்த முல்லைத்தீவு வங்கியிலிருந்து சில முக்கிய ஆவணங்கள் மீட்கப்பட்டு வவுனியா இலங்கை வங்கியில் வைக்கப்பட்டுள்ளது. (150)

வானியல் பாசறை

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் விஞ்ஞான கணிதக் கழகத்தினால் கோப்பாய் கொத்தணிப் பாடசாலைகளின் ஆண்டு 8-க்கு மேற்பட்ட மாணவர்களுக்கு "வான் பொருட்கள்" என்னும் அலகுக்கான வானியல் பாசறை இம் மாதம் 7-ம் திகதி வெள்ளிக்கிழமை கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சி வகுப்பில் கோப்பாய் கொத்தணிப்பாடசாலை ஆசிரியர்களும் மாணவர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

★ பரீட்சைகள் நடைபெறுவதற்கு
அரசுக்கு எதிராக சகலரும் கண்டனம் எழுப்ப வேண்டும்

(உடுவில்)

கடந்த ஆண்டு நடைபெற வேண்டிய பரீட்சைகள் உரிய காலத்தில் நடாத்தப்படாததையிட்டு பொதுஸ்தாபனங்கள், கல்வி நிறுவனங்கள், சமய ஸ்தாபனங்கள் போன்றவற்றில் இருந்து இதுவரை எந்தவிதமான கண்டனக் குரல்களும் எழுப்பப்படவில்லை. இப் பரீட்சைகளை உடன் நடத்தக் கோரி கல்வி அமைச்சு, கல்வி அமைச்சின் செயலாளர், பரீட்சை ஆணையாளர் ஆகியோருக்கு யாழ்ப்பாணத்திலுள்ள கல்விமான்கள் பொது ஸ்தாபனங்கள் போன்றன கோரிக்கை விடுக்குமாறு யாழ்ப்பாணக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார்.

மானிப்பாய் மகளிர் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராக அவர் கலந்து கொண்டு உரையாற்றிய போதே இவ்வாறு கூறினார்.

1991ம் ஆண்டுக்கான க. பொ. த. (உ. த) பரீட்சை ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை ஆகியவை உரியகாலத்தில் நடாத்தப்படவில்லை. எமது சேவைக்காலத்தில் அதனை நடாத்த விரும்புகின்றேன். பொது நிறுவனங்கள், பெற்றோரின் கோரிக்கைகள் வைத்து பரீட்சை திணைக்களத்துக்கு ஒரு நெருக்குதலை கொடுக்கமுடியும். பரீட்சைகளையும் விரைவில் நடாத்த முடியும் எனவும் அவர் கூறினார்;

யாழ்ப்பாண மாவட்டத்தை என்றும் அலங்கரித்து நிற்பது கல்வி, எவ்வளவு நெருக்கடிகள், கஷ்டங்கள் மத்தியிலும் கல்வியின் தரம் குன்றாது இருக்கக் காரணம். பெற்றோரின் தூண்டுதலும் பிள்ளைகளின் விடாமுயற்சியுமேயாகும், தனியார் கல்விக்கூடங்களில் மாணவர்களுக்கான முழுமையான கற்றல் நடைபெறவில்லை, பாடசாலைகளையே கல்விக்கு முழுமையாக நம்பி மாணவர்கள் வருகின்றனர். எனவே பாடசாலைகளில் கற்பித்தல் நிகழ்வுகள் முழுமையாக இடம்பெற வேண்டும். பெண் பிள்ளைகள் தமிழரின் கலைகள் பண்புகள் ஆகியவற்றைப் பேணி, கற்பு நெறியைப் போற்றி நல்வாழ்வை அமைத்துக்கொள்ள வேண்டும் யாழ்ப்பாணத்தின் கல்வித் தரத்தை என்றும் பேணிக் காப்பவர்களாக மாணவிகள் விளங்கவேண்டும் என்றார். (109)

சுவிஸ்ர்லாந்தில்

முகாம்களில் இலங்கையர் பலர் தடுத்து வைப்பு!

(பேர்ண்)

வேலைவாய்ப்புத் தேடிப் பல இலட்சக்கணக்கான ரூபா பணத்தைச் செலவுசெய்து, சுவிற்ஸர்லாந்து சென்ற நூற்றுக்கணக்கான தமிழர்கள் அகதி முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள்.

இவர்களுக்கு வேலைவாய்ப்பு எதுவும் வழங்கப்படாமல் பல மாதங்களாக முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

சுவிஸ் நாட்டில் வேலைவாய்ப்பு பெறச் செல்லும் வெளிநாட்டவரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதை அடுத்து, சுவிஸ் அரசு இந்த நடவடிக்கையை மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சுவிஸ் அரசின் நடவடிக்கையினால் சுவிஸில் உள்ள இலங்கையரில் பலர், வேறு நாடுகளுக்குத் தப்பியோடும் நடவடிக்கைகளில் அண்மைக்காலமாக ஈடுபட்டுவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். தமிழரிடம் கொழும்பில் பணம் பறிப்பு

(கொழும்பு)

கொழும்பு நகரில் யாழ். தமிழரிடமிருந்து பணம்பறிக்கும் நடவடிக்கைகள் இடம் பெற்றுவருகின்றன.

அண்மையில் கொழும்பு கோட்டையில் ரெயில் நிலையத்தில் வைத்து கைதடியைச் சேர்ந்த ஒருவரிடமிருந்து இருபதினாயிரம் ரூபா பணம் பறிக்கப்பட்டது.

இதேவேளை வவுனியாவிலிருந்து ரெயிலில் பயணம் செய்த வடபகுதி இளைஞர் ஒருவர் ரெயில் நிலையத்தில் வைத்து இனந்தெரியாதவர்களினால் இறக்கப்பட்டு அவரிடமிருந்து பணமும் மற்றும் பொருட்களும் பறிமுதல் செய்யப்பட்டன.

இவ்வாறு தினமும் யாழ். தமிழர்களிடம் இருந்து கொழும்பில் பணம்பறிப்பு நடவடிக்கை இடம்பெற்றுவருகின்றன.

வலைப்பந்தாட்ட உதைபந்தாட்ட போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினரால் உதைபந்தாட்ட வலைப்பந்தாட்ட சுற்றுப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

போட்டிகளில் கலந்து கொள்ளும் கழகங்கள் இம் மாதம் 20-ம் திகதிக்கு முன் 50ரூபா செலுத்தி விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பப் படிவங்களுக்கும், மேலதிக விபரங்களுக்கும் பின்வருவோரிடம் தொடர்பு கொள்ளலாம்.

செ. விஜயராஜா, ஐயனார் வீதி, பருத்தித்துறை. முருகன் ராஜலிங்கம், சக்தி அகம், காங்கேசன்துறை வீதி, மருதனார்மடம், ந. கிரிதரன், மணற்காட்டு ஒழுங்கை, மட்டுவில் தெற்கு. பா. கிருபாகரன், "அன்னை இல்லம்" அளவெட்டி வடக்கு, அளவெட்டி. த. ரி. நித்தியநாயகம், 327/9 சத்திரன் ஒழுங்கை, யாழ்ப்பாணம். செ. பிறேமதாசன். புத்தூர் கிழக்கு, புத்தூர்.

யாழ். செயலகம்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

புக்களின் ஒன்றியத்தினால் நடத்தப்படும் இந்த மறியல் போராட்டம், இன்று காலை 8-00 மணிக்கு அமைப்பாளர் திரு. சு. கிறில் தலைமையில் நடைபெறுகிறது.

மேற்படி மறியல் போராட்டத்தில், கூட்டுறவுச் சங்கங்களின் சமாச ஒன்றியம், ஆசிரியர் சங்கங்களின் ஒன்றியம் வர்த்தகர் சங்கங்களின் ஒன்றியம், சனசமூக நிலையங்களின் சமாச ஒன்றியம், கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சமாச ஒன்றியம், வங்கி ஊழியர் சங்கம், யாழ். நகர் நகை வர்த்தகர் சங்கம், தீவகம் இடம்பெயர்ந்த அரச சார்பற்ற ஊழியர் சங்கம், வடபிராந்திய சுருட்டுத் தொழிலாளர் சங்கம் உட்பட மற்றும் பல அமைப்புக்களும் கலந்து கொள்கின்றன.

யாழ். உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட மக்கள் அனைவரும், இன்று காலை யாழ். செயலகம் முன்பாகக் கூடுவார்கள்.

வலிகாமம் மேற்குப் பகுதி மக்கள், கொக்குவில் இந்துக் கல்லூரியில் ஒன்றுகூடி ஊர்வலமாக நல்லூர்க் கந்தசுவாமி கோவில் முன்றலை வந்தடைவார்கள்.

வடமராட்சி மக்கள், கல்வியங்காடு சந்தையில் ஒன்றுகூடி ஊர்வலமாக நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்றலை வந்தடைவார்கள்.

தீவக மக்கள், யாழ்நகர் சத்திரச் சந்தியில் ஒன்றுகூடி ஊர்வலமாக யாழ். செயலகம் சென்றடைவர்.

தென்மராட்சி மக்கள், அரியாலை தபாற்கந்தோர்ச் சந்தியிலும், யாழ்நகர் கரையோரப் பகுதி மக்கள், சவக்காலைச் சந்தியிலும் ஒன்றுகூடி ஊர்வலமாக யாழ். செயலகம் சென்றடைவார்கள்.

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் முன்றலில் கூடும் மக்கள் அனைவரும் பின்னர் ஊர்வலமாகக் கோவில் வீதி வழியாக வந்து, சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்க அலுவலகத்தில், மகஜரின் பிரதியைக் கையளித்த பின்பு, யாழ். செயலகம் சென்றடைவார்கள்.

இன்று நண்பகல் 12-15 மணிக்கு யாழ். அரச அதிபர் திரு. க. மாணிக்கவாசகரிடம் மகஜரைக் கையளித்தபின்னர் மேற்படி மறியல் போராட்டம் முடிவுறும் என்றும் கூறப்படுகின்றது. [வி-16

சமாதான

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்புநிலை ஏற்பட்டுள்ளதாக கொழும்பில் அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ராஜீவ் கொலை வழக்கில் திரு பிரபாகரன் குற்றம் சாட்டப்பட்டிருப்பதை யடுத்தே இச்சூழ்நிலை எழுந்துள்ளதாகவும் அவ்வட்டாரங்கள் கூறின.

இவ்வாரம் 7ம், 8ம் திகதிகளில் பாரிஸில் உதவி வழங்கும் நாடுகளின் மாநாடு நடைபெற்ற பின்பே இத்தாக்குதல் ஆரம்பமாகுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

யாழ். பல்கலைக்கழக

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு யாழ். பல்கலைக்கழக மாணவர் அவையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக மாணவர் அவையினால் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

"தமிழ்மக்கள்மீதான இராணுவ நடவடிக்கைகளை நிறுத்துமாறும், தமிழ்மண்ணை ஆக்கிரமித்துள்ள இராணுவத்தை விலக்கிக் கொள்ளுமாறும், கண்மூடித்தனமான ஷெல்வீச்சுக்கள் குண்டுவீச்சுகளை நிறுத்துமாறும், தமிழ்ப் பகுதிகள் மீதுள்ள பொருளாதாரத் தடைகளை நீக்குமாறும், தமிழ் பகுதிகளுக்குரிய நிவாரண உதவிகளை உரிய முறையில் வழங்குமாறும், கோரி பல்வேறு பொதுசன அமைப்புக்கள் சங்கங்கள் என்பனவற்றால் இன்று நடத்தப்படவுள்ள மாபெரும் மறியல் போராட்டத்திற்கு எமது பூரண ஆதரவைத் தெரிவிப்பதுடன் இந்த மறியல் போராட்டத்திலே கலந்து நாமும் பங்களிப்புச் செய்வதுடன் தமிழீழ மக்கள் அனைவரும் இந்த எழுச்சிப் போராட்டத்திலே கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1992-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 05-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registred as a News Paper at the Geueral Post office Sri Lank under Licence Number B/10336/81.

கோழிகளுக்கு தூக்க நோய்

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாணத்தில் தற்போது நிலவிவருகின்ற கடும் காற்று குளிர், பனி காரணமாக சில பகுதிகளில் கோழிகளுக்கு ஒருவித தூக்கநோய் ஏற்பட்டு கோழிகள் திடீரென இறந்து வருகின்றன. [154]

உள்நாட்டு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வது வேதனை தரும் விடயம் என்றும் நாடு இரத்தக்காடாக மாறி வருவது கவலை தரும் விடயமென்றும் தெரிவித்தார். (அ)

உதவி வழங்கும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மன் வீரக்கோன் உட்பட பல உயர் அதிகாரிகள் இக்குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

இலங்கைக்கு 1992ம் ஆண்டுக்கான நிதிவுதவிகள் வழங்குவது பற்றி இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்படும். (அ)

படையினர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பிடிக்கச் செல்லும் மீனவர்கள் கடற்படையினரால் அடிக்கடி தாக்கப்படுகின்றனர்.

இப்பகுதியிலுள்ள மாதகல் கடலில் அண்மையில் மீன்பிடிக்கச் சென்ற இருமீனவர்கள் காணாமல் போயுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஆனையிறவு

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இச்சம்பவத்தில் 4 படையினர் பலியானதை அரசு சார்பு செய்திகளும் ஊர்ஜிதம் செய்தன.

இப்படகு சிறிலங்கா அரசினால் அண்மையில் பெருந்தொகையான செலவில் வாங்கப்பட்ட நவீனரக விசைப்படகு என்பது குறிப்பிடத்தக்கது. (மாரி)

மட்டு. மாவட்டத்தில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ராசா சுட்டுக் கொல்லப்பட்டனர்.

நேற்றுமுன் தினம் காலை அம்பலாந்துறை கிராமத்தை சுற்றிவளைத்த படையினர் பல இளைஞர்களை கைது செய்ததுடன் நால்வரைச் சுட்டுக் கொன்றனர்.

கே. யோகன், (குருக்கள் மடம்) சி. மகேந்திரராசா [அம்பலாந்துறை], எ. தியாகராசா, ந. பாஸ்கரன் ஆகியோரே இவ்வாறு சுட்டுக் கொல்லப்பட்டார்கள்.

யாழ். குடாவில்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

மண்டைதீவில் நிலைகொண்ட படையினரால் குருநகர் பகுதியை நோக்கி நேற்றுக் காலை துப்பாக்கிப் பிரயோகம் மற்றும் ஷெல் தாக்குதலும் நடாத்தப்பட்டது.

ஸ்ரீலங்காப் படையினருக்கு சொந்தமான ஹெலிகொப்டர் ஒன்று நேற்று மக்கள் குடியிருப்புகளை நோக்கி கலத்த துப்பாக்கிப் பிரயோகத்தையும் மேற்கொண்டது. (அ)

வடமராட்சிப் பகுதியில் காவல்நிலைகள் திறப்பு

(வடமராட்சி)

பருத்தித்துறைப் பிரதேசத்துக்கான காவல் நிலையம் வதிரியில் நேற்று உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

இத்திறப்பு விழாவில் தமிழீழ கடற்படைத் தளபதி திரு. சூசை தேசியக் கொடியை ஏற்றிக் காவல்நிலையத்தைத் திறந்து வைத்தார். காவல்துறைப் பொறுப்பாளர் திரு நடேசன் காவல்துறைக் கொடியையும், மகளிர் படைத் தளபதி செல்வி ஜெயந்தியும் வடமராட்சி விசேடதளபதி அர்ச்சுனாவும் மங்கள விளக்கேற்றி வைத்தனர். [51]

விபுலானந்தர் நினைவாக தமிழ் மொழித்தினம்

(உடுவில்)

சுவாமி விபுலானந்தர் பிறந்த தினமான ஜூலை மாதம் 19 ஆம் திகதியிலன்று இவ்வருடத்துக்கான பாடசாலை தமிழ்மொழி தினம் நடைபெறவுள்ளது.

கல்வி, உயர்கல்வி அமைச்சின் தமிழ் மொழிப் பிரிவுக் கல்விப் பணிப்பாளர் திரு. வெ. சபாநாயகம் அனுப்பி வைத்துள்ள சுற்றுநிருபத்தில் இதனை அறிவித்துள்ளார்.

தமிழ்மொழித் தினப்போட்டிகள் பாடசாலை மட்டத்தில் பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதிக்கு முன்பு நடாத்தப்படும்.

பாடசாலைகளில் ஆண்டு 4 முதல் 13 வரை கல்வி பயிலும் மாணவர்கள் இப்போட்டிகளில் தனித்தனியாகவும், குழுவாகவும் பங்குபற்ற முடியும்.

வாசிப்பு, சொல்வதெழுதல், எழுத்து, ஆக்கம், கட்டுரை, கவிதை, சிறுகதை, பேச்சு ஆகிய துறைகளில் தமிழ்மொழிப் போட்டிகள் நடைபெறும்.

கோட்டமட்டத்திலான தமிழ்மொழிப் போட்டிகள் மார்ச் மாதம் 5ம் திகதிக்கு முன்பும், மாகாணமட்டத்தில் மே மாதம் 25ம் திகதிக்கு முன்பும் இப்போட்டிகள் நடைபெறும்.

பாடசாலை கோட்ட மாகாண மட்டங்களில் நடைபெறும் போட்டிகளில் முதல் மூன்று இடங்களை பெறுபவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படும்.

மாகாண நிலையில், ஒவ்வொரு பிரிவிலும் ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் முதலிடம் பெறுவோர் தேசியநிலைப் போட்டிகளில் பங்குகொள்ள அனுமதிக்கப்படுவர் (109)

பாராட்டு விழா

(பருத்தித்துறை)

புலோலி கொத்தணி அதிபராகவிருந்து வடமராட்சி உதவிக் கல்விப்பணிப்பாளராகப் பதவியுயர்வுபெற்றுள்ள திரு. வி. எஸ். ஏகாம்பரநாதனைப் பாராட்டி பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கம் சட்டத்தரணி திரு. இ. உருத்திரா தலைமையில் பாராட்டுவிழா ஒன்றை நடத்தியது. (52)

மாதாந்தக் கொடுப்பனவு

[வேலணை]

தீவகத்தைச் சேர்ந்த காசநோய், தொழுநோய், புற்றுநோய் ஆகிய நோயாளர்களுக்கான நவம்பர், டிசம்பர் மாதக் கொடுப்பனவு வேலணைப்பகுதி பிரிவுச் செயலாளர் அலுவலகத்தில் வைத்து வழங்கப்பட்டுவருகின்றது.

இப்பிரிவு செயலகம் யாழ். கச்சேரி அலுவலகத்தில் தற்காலிகமாக இயங்கிவருகிறது. [75]

ஊர்வலங்கள்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தமிழகத்தில் தி. மு. கழகத்தினர் பேரணி மற்றும் ஊர்வலம் நடத்துவதாக இருந்தால் அவற்றில் வன்முறையோ பொதுச்சொத்துக்கு சேதமோ ஏற்படாது என தி. மு. க. தலைவர் எழுத்துமூலம் உறுதியளிக்க வேண்டும்: இல்லையாயின் மாநில அரசு இத்தகைய பேரணி மற்றும் ஊர்வலங்களுக்கு அனுமதி வழங்காது" (அ)

குண்டுவெடிப்பில் 40 பேர் காயம்!

(ஸ்ரீநகர்)

ஜம்மு காஷ்மீரில் நேற்று இடம் பெற்ற குண்டுவெடிப்பு ஒன்றில் 40 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

பஸ்நிலையத்திற்கு அருகில் மேற்படி குண்டுவெடிப்பு இடம் பெற்றதாகவும் இக்குண்டுவெடிப்பு குறித்து எவரும் உரிமை கோரவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

பண்ணிசைப் போட்டிகள்

(உடுவில்)

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையினரால் நடாத்தப்படும் பண்ணிசைப் போட்டிகள் இம்மாதம் ஒன்பதாம் திகதி நடைபெற உள்ளது.

பாடசாலைகளில் உள்ள 6ம், 7ம் ஆண்டு மாணவர்கள் கீழ்ப்பிரிவிலும், 8, 9ஆம் ஆண்டு மாணவர்கள் மத்திய பிரிவிலும், 10, 11ம் ஆண்டு மாணவர்கள் மேற்பிரிவிலும் பரீட்சைக்குத் தோற்றுவர்.

ஒவ்வொரு பிரிவிலும் முதலிடம் பெறுவோருக்கு தங்கப் பதக்கமும் முதல் மூன்று இடங்களைப் பெறுபவர்களுக்கு விசேட பரிசுகளும் இம்மாதம் 19 ஆம்திகதி வழங்கப்படும்.